Picture Houses

*16 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether there are proposals under the consideration of the Government to construct picture houses in public sector for screening films in this State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, நெய்வேலி, டவுன்சிப்பில் ஏற்கெனவே ஒரு சினிமா தியேட்டர் இருக்கிறது. அந்தத் தியேட்டர் மூடி இன்னும் திறக்காமல் இருக்கிறது. அம்மாதிரியான டவுன்சிப்பில் ஏதாவது ஒரு தியேட்டர் இருக்கிறது என்று சொன்னால், அது சரியான முறையில் நடப்பதற்கும், அதே மாதிரியாக திருச்சி, ஆவடி, கல்பாக்கம் போன்ற இடங்களில் இருக்கக்கூடிய சினிமா தியேட்டர்கள் முறையாக நடப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா? காரணம், அங்கே உள்ள ஒரு சினிமா தியேட்டரை மூடிவிட்டால். அங்கே தொழில் தகாறு, சிக்கல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அதற்கான நடவடிக்கை அரசு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்படிப்பட்ட திரையரங்குகளை பொதுத்துறையிலே அரசு கட்டுவதற்கான செயற்குறிப்பு இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட சில இடங்களைப் பற்றி கூறியிருக்கிறார்கள். அது பற்றிய விவரங்கள் கொடுத்தால் ஆலோசிக்கலாம். ஆனால், பொதுவாக 'செமி-பர்மனென்ட்' தியேட்டர் என்ற அளவில் கட்டுவதற்கு தனிப்பட்டவர்கள் முன்வந்தால், அவர்களுக்கு அரசின் சார்பில் கடன் வழங்குவதற்கு, தமிழ்நாடு தியேட்டர் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டு, அதன் மூலம் அந்த உதவி செய்யப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: Is the Government aware of the fact that in most of the theatres which are air-conditioned, during the last one hour they switch off the air-condition plant ? A number of complaints have also been received about that. Because of the switching off of the air-condition plant, the air cannot go out as the theatres are completely closed due to air-conditioning, unlike the other non-airconditioned theatres where breeze can go out and come in. In view of the complaints raised in this House, will the Government give instructions to such theatres that they should switch off the air-condition plant only about 5 minutes or 10 minutes before the closure of the cinema or after the picture is closed, so that the people who are inside will not be affected adversely regarding health ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் சொன்னதை நினைவில் வைத்து தியேட்டர்களுக்கு லைசென்சு வழங்கும்போது, சுகாதார வசதிகள் இருக்கிறதா என்று ஆராயப்படுகிறபோதும், இதற்கான வழி வகை செய்யப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்த 'செமி-பர்மனன்ட்' தியேட்டர் கட்டுவதற்கு தனியாருக்கு கடன் உதவி செய்வதற்கு ஒரு நிறுவனத்தை நிறுவி இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல், நகர மன்றங்களும், ஊராட்சி மன்றங்களும், இந்த 'செமி-பர்மனன்ட்' தியேட்டர் கட்டுவதற்கு முன்வந்தால், அதை அனுமதித்து, கடன் வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அதற்காகத்தான், ஒரு தியேட்டர் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டு இருக்கிறது. அது அவற்றை பற்றி ஆலோசித்து முடிவு அறிவித்த பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : I wanted only to repeat hon. Member Raja's question, that is, whether in view of the financial difficulties of panchayats and self-governing institutions like municipalities and corporations, this Government will encourage construction and running of theatres by these institutions by financing them ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இராஜவின் கேள்விக்கு மந்திரி அளித்த பதிலையே இப்போதும் திரும்பச் சொல்கிறேன். (சிரிப்பு)

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, திரைப்பட அரங்குகளை நாட்டுடமையாக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதைக்கு இல்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, 'செமி-பர்மனன்ட்' தியேட்டர் கட்டுவதற்கு அரசாங்கம் உச்சபட்சம் எவ்வளவு கடன் தொகை வழங்குகிறது ? மான்யமாக ஏதாவது தரப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே அப்படி கட்டப்பட இருக்கும் 'செமி-பர்மனன்ட்' தியேட்டரின் எஸ்டிமேட் தொகையில் 2/3 பங்கு தொகை அல்லது ரூ. 1 லட்சம், எது குறைவோ அந்தத் தொகை கடனாக வழங்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, திரைப்பட அரங்குகளை நாட்டுடமையாக்கும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். இப்போது இருக்கும் தனியார் துறை அரங்குகளில் டிக்கெட் மோசடி செய்தல், வரி ஏய்த்தல் போன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, எப்போது தேசியமயமாக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருபோது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, குளிர் பதனங்களை தியேட்டர்காரர்கள் நிறுத்தி விடுகிறார்கள் என்று திரு. ஹாண்டே அவர்கள் கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். தியேட்டர்காரர்கள், மின்சாரம் குறைவாக இருப்பதால் குளிர் சாதனங்கள் நிறுத்தப்படும் என்று விளம்பரப்படுத்தியே செய்கிறார்கள். ஆகவே, போதிய மின்சாரம் அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

(பதில் இல்லை)

1971 அக்டோபர் 23]

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, திரைப்படக் கொட்டகைகளில் பல மோசடிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் தியேட்டர் உரிமையாளர்களே அனுமதிச் சீட்டு அடிப்பதால் உண்டாகும் ஊழல் குறிப்பிடத்தக்கது. ஆகவே, அரசாங்கமே அனுமதிச் சீட்டுகளை அச்சடித்து கொடுத்தால், இத்தகைய ஊழல்கள் நடக்காமல் இருக்கும். அதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் அவர்களிடத்திலே கேட்கப்படவேண்டிய பல கேள்விகள் என்னிடத்திலே கேட்கப்பட்டிருக்கின்றன. ஆனால் முதலமைச்சர் என்ற பொறுப்பில் நான் இருப்பதால், அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொதுவாக, திரைப்பட அரங்குகளில் டிக்கட் மோசடி நடந்து வருவதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாமல் இல்லை. எப்படி தடுத்து நிறுத்துவது, ஒழுங்காக எப்படி வரி வசூல் செய்வது என்பதைப் பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

பல்லடத்தில் தொழிற்பேட்டைகள்

* 38. வினா—திரு. கே. என் குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல்லடம் ஒரு வறட்சிப் பகுதியாக தொடர்ந்து நீடிக்கப்படுகிறபடியால் அங்கு சிறு தொழில்கள் நடத்த வேண்டி தொழிற்பேட்டைகள் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த பல்லடம் பகுதி ஒரு விவசாயப் பகுதியாக இருந்தது. அது வறட்சிப் பகுதியாக மாறி விட்டதால், அங்கே விவசாயம் நடப்பதற்கு வாய்ப்பு இல்லை. அந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற வகையில், யாராவது சிறு தொழில்கள் நடத்த முன்வந்தால், அவர்களுக்கு தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு முன் வருமா? இனி மேலாவது ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி யாராவது முன் வருவார்களே யானால், கூட்டுறவுத் துறையிலானாலும் சரி, நம்முடைய சிறு தொழில் வாரியத்தின் மூலமாகவும் சரி, அவர்களுக்கு கடன் தரப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம் பொதுவாக முற்போக்கான மாவட்டம் என்ற அடிப்படையில் அங்கே தொழில்கள் ஆரம்பிப்பதற்கான ஆர்வம் அதிகம் காட்டப்படுவதில்லை. கோவை மாவட்டத்தில் பல்லடம், அவினாசி வட்டங்கள் மிகுந்த வறட்சியாக இருப்பதால், அரசாங்கம், கோவை மாவட்டத்தைப் பொதுவான கண்ணோட்டத்தோடு பார்க்காமல், தனிப்பட்ட முறையில் இப்படிப்பட்ட இடங்களுக்கு சலுகை தர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோவை மாவட்டம் முன்னேற்றமான மாவட்டம் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதிலே சில பகுதிகளுக்கு சலுகை தேவை என்று குறிப்பிட்டார்கள். அந்தப்